©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 16.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 494A] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 19, 2022
ஐப்பசி 2, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள்:** | |
| எண். 53/2022—தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டம் .. .. .. | 2–20 |
| எண். 54/2022—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டம் .. .. | 21–22 |
| எண். 55/2022—தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. | 23–26 |
| எண். 56/2022—தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் .. .. .. | 27–30 |
| எண். 57/2022—2022 ஆம் ஆண்டு சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைத் தயாரிப்புகள் (விளம்பரம் செய்தலைத் தடைசெய்தல் மற்றும் வணிகம் மற்றும் வாணிபம், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தலை முறைப்படுத்துதல்) தமிழ்நாடு திருத்தச் சட்டம் .. .. .. | 31–34 |
| எண். 58/2022—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 6) சட்டம் .. .. | 35–41 |

**2022**ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் **19**ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130–**ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது**.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 53/2022**

**தமிழ்நாடு மாநிலத்தில் இணையவழி சூதாட்டத்தை தடை செய்தலுக்கும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமானதொரு சட்டமுன்வடிவு.**

சமீபத்திய ஆண்டுகளில், இணையவழி சூதாட்ட அடிமைத்தனத்தினால் பலர் தாங்க முடியாத கடனைப்பெறுவதால், அது தற்கொலைகளுக்கு வழிவகுக்கிறது என்பதாலும்;

மேலும், இணையவழி சூதாட்டங்களுக்கு அடிமையாதலானது நிதி நெருக்கடியினை ஏற்படுத்துகிறது மற்றும் பல குடும்பங்களை சீரழிக்கிறது என்பதாலும்;

மேலும், பெரும்பாலும் இணைய வழியில் உள்ள சூதாட்ட சீர்குலைவானது, உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) இனங்கண்டறியப்பட்டு, அதன் சர்வதேச நோய்களின் வகைப்பாட்டில் (**11**வது திருத்தம்) சேர்க்கப்பட்டுள்ளது**.** இது விடாப்பிடியான அல்லது திரும்பத்திரும்ப நிகழ்கிற விளையாடும் நடத்தை அமைப்பினால் வகைப்படுத்தப்படுகிறது மற்றும் விளையாட்டின் மீதான பலவீனமான கட்டுப்பாடானது மற்ற செயல்பாடுகளை விட சூதாட்டத்திற்கு முன்னுரிமை அளிப்பதனை வெளிப்படுத்துகிறது மற்றும் அவ்வாறு தொடர்ந்து விளையாடுவது தனிநபர், குடும்பம், சமூகம், கல்வி, தொழில் அல்லது முக்கிய செயல்பாடுகள் பிறவற்றில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது என்பதாலும்;

மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமானது, பொது ஆணையின் மூலம் 03.08.2021ஆம் தேதியிட்ட நீதிப்பேராணை மனு எண்.18022/2020 மற்றும் பிறவற்றில், மாநிலத்தில் பந்தயம் கட்டுதல் மற்றும் சூதாட்டம் ஆகியவற்றில் அரசமைப்பின் உரிமை உணர்வுக்கு உத்திரவாதம் அளிக்கக்கூடிய ஒரு பொருத்தமான சட்டத்தினை கொண்டு வருவதற்கான சுதந்திரத்துடன், இணையவெளியில் பணயம்வைத்தல் அல்லது பந்தயம் கட்டுதலை தடை செய்த 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டம் மற்றும் காவலர் சட்டங்கள் (திருத்தச்) சட்டத்தின் II-ஆம் பகுதி அரசமைப்பை மீறுகிறதென நீக்கியது என்பதாலும்; தமிழ்நாடு சட்டம் 1/2021.

மேலும், அரசானது, இணையவழி விளையாட்டுகள் மீது புதிய சட்டம் ஒன்றினை இயற்ற அறிவுரை வழங்குவதற்கு மாண்புமிகு ஓய்வுபெற்ற நீதிபதி திரு. K. சந்துரு அவர்களின் தலைமையின் கீழ் ஐந்து நபர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது என்பதாலும்;

மேலும், குழுவானது அதன் அறிக்கையில், செயல்முறையின் இயல்சார் இடைவெளியின் வரைக்கூறுகள், விளையாடும் நேரம், மற்ற விளையாட்டாளர்களுடனான உறவு, அடிமையாதலின் அளவு, தொடர்புடைய பணத்தின் அளவு, பொருளாதார நடவடிக்கை நிலை, அமைப்பாளரின் இலாப அளவுகோல் மற்றும் கடனின் பங்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சீரற்ற வெளியீட்டு உருவாக்கி எதனையும் உள்ளடக்காத வார்த்தை விளையாட்டுகள் அல்லது பலகை விளையாட்டுகள் தவிர்த்து இணையவழி ரீதியிலான விளையாட்டு எதுவும் இணையவழி அல்லாத விளையாட்டுடன் ஒப்பீடு செய்யப்படவியலாது என கண்டறியப்பட்டது என்பதாலும்;

மேலும், இணையவழி ரம்மி உள்ளிட்ட இணையவழி வகையிலான விளையாட்டுக்களைப் பொறுத்தநேர்வில், சீரற்ற வெளியீட்டு உருவாக்கிகளுக்கான நிரல்நெறிமுறையானது உருவாக்குநர்களுக்குத் தெரியும் எனவும், எனவே, அவை போலி சீரற்ற உருவாக்கிகள் எனவும்; அத்தகைய விளையாட்டுகளை எந்திரங்களுடன் (அமைப்பு அல்லது பயனாளர்களுடன் தொடர்பு கொள்ள வடிவமைக்கப்பட்ட ஒரு தன்னாட்சி நிரலாக்கம் அல்லது பாத்திரம்) விளையாடலாம் எனவும்; சூதாட்ட அமைப்புகளின் மையப்படுத்தப்பட்ட வழங்கி (server) கட்டமைப்பை தணிக்கை செய்ய எந்த வழிமுறையும் இல்லை எனவும்; மேலும் விளையாட்டுகளைக் கையாளவும், தொடர்ந்து விளையாடுவதற்கு விளையாட்டாளர்களைக் கவருவதற்கும் செயற்கை நுண்ணறிவானது பயன்படுத்தப்படலாம் எனவும்; அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்பதாலும்;

மேலும் கூறப்பட்ட அறிக்கையானது, இணையவழி சூதாட்டங்களை பொதுவாக இரண்டு வகைகளாக வகை செய்கிறது. அதாவது, ஒன்று குறைந்தபட்ச அல்லது புறக்கணிக்கத்தக்க சீரற்ற காரணியைக் கொண்டது மற்றும் மற்றொன்று சீரற்ற நிகழ்வு அல்லது எண்ணிக்கை உருவாக்கிகளைக் கொண்டது. அது சீரற்ற போலி மற்றும் அடிமையாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டும் அதற்கிணங்கியவாறு முந்தையதை ஒழுங்குபடுத்தவும், பிந்தையதைத் தடை செய்யவும் பரிந்துரை செய்கிறது என்பதாலும்;

மேலும், பள்ளிக்கல்வித்துறையின் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களிடம், பள்ளி மாணவர்களின் மீது இணையவழி விளையாட்டுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்காக அரசு சமீபத்தில் நடத்திய ஆய்வில், எழுபத்து நான்கு விழுக்காட்டிற்கும் அதிகமான ஆசிரியர்கள், பதிலாளர்கள் மாணவர்களின் கவனம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அறுபத்து ஏழு விழுக்காடு பதிலாளர்கள் அதிகமான கண் குறைபாடுகளை கண்டறிந்ததாகவும், அவர்களில் எழுபத்து நான்கு விழுக்காட்டிற்கும் அதிகமான மாணவர்கள் அறிவுத்திறன், எழுதும் திறன் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றில் குறைபாட்டைக் கண்டறிந்ததாகவும், எழுபத்து ஆறு விழுக்காட்டிற்கும் அதிகமான மாணவர்களின் சுயமதிப்பீட்டில் கணிசமான குறைவை அவர்கள் கண்டறிந்ததாகவும். எழுபத்தேழு விழுக்காட்டிற்கும் அதிகமான மாணவர்களின் கோபப்படும் தன்மை அதிகரிப்பதையும்; எழுபத்திரண்டு விழுக்காட்டிற்கும் அதிகமான மாணவர்களின் ஒழுக்கமின்மையை கண்டறிந்ததாகவும் கூறினார்கள் என்பதாலும்;

மேலும், அரசானது, கொண்டுவரப்பட உள்ள சட்டத்தின் மீது பொது மக்களின் கருத்தினைக் கேட்கும்போது, தொண்ணூற்று ஒன்பது விழுக்காட்டிற்கும் அதிகமாக, அதாவது மொத்தமாக பெறப்பட்ட 10,735 மின்னஞ்சல்களில் 10,708 மின்னஞ்சல்களானது, இணையவழி சூதாட்டங்களின் மீது முழுமையான தடையினை விதிக்கக் கோரியுள்ளது என்பதாலும்;

மேலும், இணையவழி சூதாட்ட நிறுவனங்கள், சிந்தனையாளர்கள், அரசியல் கட்சிகள், விளையாட்டு வீரர்களின் சங்கம் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய பதினேழு பங்கேற்பாளர்களுக்கு நேரில் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பானது வழங்கப்பட்டது. அவர்கள் தொழில்துறையின் சுய கட்டுப்பாட்டினை ஒழுங்குமுறைப்படுத்துவதை அனுமதித்தல், அரசின் மூலம் ஒழுங்குமுறைப்படுத்துதல், உண்மையான பணம் தொடர்புடைய விளையாட்டுகளை மற்ற பிறவகையான விளையாட்டுகளிலிருந்து வேறுபடுத்துதல், வயது மற்றும் பணம் தொடர்புடைய கட்டுப்பாடுகளை வழங்குதல், விளம்பரங்களை தடை செய்தல், பணச்சலவை செய்தலைத் தடுத்தல், குறைதீர்க்கும் இயங்குமுறையை வழங்குதல் மற்றும் இணையவழி சூதாட்டங்களுக்கு முழுவதுமாக தடைவிதித்தல் போன்ற பல்வேறு பரிந்துரைகளையும், கோரிக்கைகளையும், அரசிடம் முன்வைத்துள்ளனர் என்பதாலும்;

மேலும், இணையவழி விளையாட்டுகள் மற்றும் சூதாட்டங்களின் சிக்கல்களை பழைய ஈரிணைய வாய்ப்பு (Binary) விளையாட்டுக்கு மாறாக திறன் விளையாட்டு என்பதன் மூலம் சரிசெய்ய இயலாது என்று கருதப்படுகிறது. அடிப்படை மட்டத்தில் தகவல் தொழில்நுட்பமானது எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் இயல்சார்ந்த மற்றும் பொதுவான இணைய வழிக்கும் இடையேயுள்ளதும் மற்றும் இயல்சார்ந்த மற்றும் இணையவழி விளையாட்டுக்களுக்கு இடையேயுள்ளதுமான நெருக்கடியானதொரு வேறுபாடுகளையும் புரிந்து கொள்கின்ற புதிய கருத்தியல் கட்டமைப்பு தேவைப்படுகிறது என்பதாலும்;

மேலும், ஒரு மென்பொருளில் உண்மையான சீரற்ற வெளியீடானது சாத்தியமில்லை என்பதும், சீரற்றவை எதுவும் உருவாக்குபவரால் எழுதப்பட்ட குறிப்பிட்டதொரு நிரல்நெறிமுறையினைச் சார்ந்திருக்கும் என்பதும் நிரல்நெறிமுறையின் தணிக்கையானது, விளையாட்டு வழங்குநருக்குச் சாதகமாக வடிவமைக்கப்பட்ட மறைமுக நிரல்நெறிமுறைகள் எதனையும் கண்டறிவதை கடினமாக்குகிறது என்பதும் இணையவழி விளையாட்டில் உள்ள செயற்கை நுண்ணறிவின் மேலான விளைவானது, விளையாட்டு சேவைவழங்குநர்/ செயலாக்குநர் உண்மையில் அனைத்து அட்டைகளையும் வைத்திருப்பதுடன், விளையாடுபவர்/ நுகர்வோருக்கு முற்றிலும் நியாயமற்ற விளையாட்டுச் சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதும்; போலி சீரற்ற நிலையினை சோதிப்பதற்கு அறிவியல் பூர்வமாக சரிபார்க்கப்பட்ட நிரல்நெறிமுறை ஏதும் தற்போதில்லை என்பதும் நிரூபிக்கப்பட்ட அறிவியல் உண்மை என்பதாலும்;

மேலும், இணையவழி விளையாட்டுகளின் வடிவமைப்பின் உள்ளார்ந்த அடிமைத்தனமும் விளையாடுபவர்களால் செலுத்தப்படும் பணமும், முழுமையான விளையாட்டுமுறையினை சுரண்டலுக்கும் அடிமையாக்கும் தன்மைக்கும் காரணமாகிறது, அது உடல்நல அபாயம் மட்டுமல்லாது சமூக மற்றும் பொருளாதாரத்தில் பெருவாரியான விகிதத்தில் பாதிப்பினை ஏற்படுத்துகிறது என்பதாலும்;

மேலும், இளைஞர்கள் மீதான இணையவழி சூதாட்டம் மற்றும் இணையவழி விளையாட்டுக்களின் அடிமையாதலின் விளைவுகளின் மீதான பல ஆராய்ச்சி ஆய்வுகளானது, ஆக்ரோசமான நடத்தையின் வளர்ச்சி, மோசமான கண்பார்வை, சிந்தனைத்திறன் குறைதல், பகுப்பாய்தல் சிந்தனை குறைதல், உற்பத்தித்திறன் குறைதல் போன்ற எதிர்மறை விளைவுகளை சுட்டிக்காட்டுகின்றன. எனவே, இவை மாநிலத்தின் மற்றும் அதன் மக்கள் தொகையின் நீண்ட எதிர்கால வாய்ப்புகளைப் பாதிக்கும் ஒரு சக்திவாய்ந்த தீமையாகப் பார்க்கப்படுதல் வேண்டும் என்பதாலும்;

மேலும், இணையவழி விளையாட்டானது அடிமைத்தனத்தின் மூலம் குடும்பங்களின் அழிவு மற்றும் தற்கொலை மரணங்களை ஏற்படுத்துகிறது, மக்களின் உடல் நலத்தை பாதிக்கிறது, சமூக ஒழுங்கை சீர்குலைக்கிறது மற்றும் பொது ஒழுங்கைப் பேணுவதில் ஊறு ஏற்படுத்துகிறது என்பதாலும்;

மேலும், அரசானது, மேற்கூறப்பட்ட குழுவின் அறிக்கை, பள்ளி ஆசிரியர்களுக்கிடையேயான ஆய்வு முடிவுகள், அந்த கருப்பொருளின் மீதான ஆய்வுகள், பங்குரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துகள் ஆகியவற்றைக் கவனமாக கருத்தில் கொண்டு, பின்னர் மாநிலத்தில் இணையவழி சூதாட்டத்தினை தடை செய்வதற்கும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் சட்டமொன்றை இயற்றுவதென முடிவு செய்துள்ளது என்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம்—I.

## முன்னுரை.

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டமானது, 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது அறிவிக்கையின் வாயிலாக அரசால் குறிப்பிடப்படலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி.— பொருள் வரையறைகள்.

(a) "மேல்முறையீட்டு அதிகார அமைப்பு" என்பது 13ஆம் பிரிவின் கீழ் அரசால் நிறுவப்பட்ட மேல்முறையீட்டு அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(b) "குறிப்பிடப்பட்ட நாள்" என்பது 1ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட தேதி என்று பொருள்படும்;

(c) "அதிகார அமைப்பு" என்பது, 3ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட தமிழ்நாடு இணையவழி விளையாட்டு அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(d) "இருப்பிடத்தின் அடிப்படையில் இணைய உள்ளடக்கத்தினை தடை செய்தல்" என்பது பயனர்களின் புவியியல் இருப்பிடத்தின் அடிப்படையில், இணையவழி உள்ளடக்கம், இணையவழி பயன்பாடுகள் அல்லது இணையவழி சேவைகளை அணுகுவதிலிருந்து பயனர்களைக் கட்டுப்படுத்துவது என்று பொருள்படும்;

(e) "அரசு" என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(f) "உள்ளூர் இணையவழி விளையாட்டுகளின் வழங்குநர்" என்பது,—

i. மைய மேலாண்மை மற்றும் சேவைக் கட்டுப்பாட்டினை இம்மாநிலத்திற்குள்; அல்லது

ii. வாடிக்கையாளர்களால் அணுகுவதற்காக கிடைக்கக்கூடிய சேவையினை இம்மாநிலத்திற்குள் தொகுத்து வழங்குகின்ற;

இணையவழி விளையாட்டு வழங்குநர் என்று பொருள்படும்;

(g) "உள்ளூர் அல்லாத இணையவழி விளையாட்டு வழங்குநர்' என்பது உள்ளூர் இணையவழி விளையாட்டுகள் வழங்குநராக அல்லாத இணையவழி விளையாட்டுகள் சேவை வழங்குநர் எவரும் என்று பொருள்படும்;

(h) "பிற பந்தயப் பொருட்கள்" என்பது பணத்திற்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்ட எதையும் உள்ளடக்கியது மற்றும் கணினிவழி கடன்கள், கணினிவழி நாணயங்கள், கணினிவழி அடையாள வில்லைகள், கணினிவழி பொருட்கள் அல்லது இணையவழி விளையாட்டிற்காக அல்லது அதன் ஒரு பகுதியாக அல்லது அதன் தொடர்புடையதாக வாங்கப்பட்ட அதனையொத்த பொருள் எதுவும் என்று பொருள்படும்;

(i) "இணையவழி சூதாட்டம்" என்பது இணையவழியில் பணயம் வைத்தல் அல்லது பந்தயம் கட்டுதல் மற்றும் பணம் அல்லது பிற பந்தயப் பொருட்களை எந்த வகையிலும், இணையவழி விளையாட்டுக்கான வாய்ப்பு எதனையும் உள்ளடக்கியது என்று பொருள்படும்;

**விளக்கம்.—** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக பணயம் வைத்தல் அல்லது பந்தயம் கட்டுதலானது, பந்தயங்களின் சேகரிப்பு அல்லது கோருதலையும், வெற்றிகள் அல்லது பரிசுகளின் பெறுதல் அல்லது வழங்குதலையும், பணமாகவோ அல்லது பிறவாறாகவோ அல்லது பந்தயம் எதனையும் பொறுத்தும் அல்லது பணயம் அல்லது பந்தயம் அல்லது அத்தகைய சேகரிப்பு, கோருதல், பெறுதல் அல்லது வழங்குதல் ஆகியவற்றுக்கு உதவ அல்லது அதனை எளிதாக்கும் நோக்கமுடைய எந்தவொரு செயலையும் உள்ளடக்கியதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(j) ‘‘இணையவழி விளையாட்டுச் சேவை’’ என்பது, இணையவழியில் பணயம் வைத்தல் அல்லது பந்தயம் கட்டுதல் அல்லது இணையவழி வாய்ப்புக்கான சேவை மற்றும், சேவையின் வாடிக்கையாளர் பணம் கொடுக்கிறார் அல்லது ஒப்புக்கொள்கிறார் அல்லது அதன் நோக்கத்திற்காக பிற பந்தயப் பொருட்களை வைக்கிறார் என்று பொருள்படும்;

(k) ‘‘இணையவழி விளையாட்டு’’ என்பது, விளையாட்டில் பங்கேற்பாளர்கள் இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், மின்னணு அல்லது மின்னிலக்க சாதனத்தில் விளையாடப்படும் மற்றும் இணையம் அல்லது பிற வகையான மின்னணு எதிலும் அல்லது தகவல்தொடர்புகளை எளிதாக்குவதற்கான பிற தொழில்நுட்பம், ஒரு மென்பொருளாக நிர்வகிக்கப்பட்டு இயக்கப்படும் விளையாட்டு என்று பொருள்படும்;

(l) ‘‘இணையவழி விளையாட்டுக்கான வாய்ப்பு’’ என்பது,—

(i) வாய்ப்பின் ஓர் உட்கூறு மற்றும் திறமையின் ஓர் உட்கூறு ஆகிய இரண்டையும் ஈடுபடுத்துகிற மற்றும் திறமையின் உட்கூறின் மீது வாய்ப்பின் உட்கூறானது ஆதிக்கம் செலுத்துகிற; அல்லது

(ii) மிகச்சிறந்த திறமையால் மட்டுமே அகற்றப்படக்கூடிய வாய்ப்பின் ஓர் உட்கூறினை ஈடுபடுத்துகிற; அல்லது

(iii) வாய்ப்பின் உட்கூறுகளை ஈடுபடுத்துகிற ஒரு விளையாட்டு; அல்லது

(iv) சீரற்ற வெளியீட்டு அல்லது நிகழ்வு உருவாக்கியினால் வேலை செய்யக்கூடிய அட்டைகள், பகடை, சக்கரம் அல்லது பிற சாதனத்தை ஈடுபடுத்துகிற இணையவழி விளையாட்டு எதனையும் உள்ளடக்குகிறது என்று பொருள்படும்;

(m) ‘‘இணையவழி விளையாட்டு வழங்குநர்’’ என்பது இணையவழி விளையாட்டு எதையும் நடத்துவதற்காக சேவையை வழங்கும் நபர் எவரும் என்று பொருள்படும்;

(n) ‘‘இணையவழி விளையாட்டு வழங்கி’’ என்பது ,இணையவழி விளையாட்டுகள் வழங்குநரால் நிறுவப்பட்ட அல்லது பராமரிக்கப்பட்ட பெருமுகக் கணினி (Mainframe computer) அல்லது கணினிகளின் தொகுப்பு எதுவும், இணையவழி விளையாட்டிலிருந்து எழும் பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்கிறது, செயலாக்குகிறது, சேமிக்கிறது, சரிபார்க்கிறது, மேலும் இது இணையவழி விளையாட்டின் முழு அமைப்பையும் நிர்வகிக்கிறது, கண்காணிக்கிறது மற்றும் கட்டுப்படுத்துகிறது என்று பொருள்படும்;

(o) "கட்டண நுழைவாயில்" என்பது, வங்கி அல்லது கடன் அட்டை கணக்குத் தகவலை நேரடியாக வழங்காமல் வணிகர்களுக்கு வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களுக்கிடையே பயனர் ஒருவரின் நிதி பரிமாற்றத்தை அங்கீகரிக்கும் சேவை என்று பொருள்படும்;

(p) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(q) "ஒழுங்குமுறைவிதிகள் " என்பது 5 ஆம் பிரிவின் கீழ் அதிகார அமைப்பினால் செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதிகள் என்று பொருள்படும்;

(r) "இணைப்புப்பட்டியல்" என்பது இந்தச் சட்டத்துடன் இணைந்த இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்;

(s) "மாநிலம்" என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

மையச்சட்டம் 21/2000.

(i) இதில் பயன்படுத்தப்பட்ட மற்றும் இந்தச் சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்படாத, ஆனால் 2000ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் முறையே, இந்தச் சட்டத்தில் அதற்கென குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அத்தியாயம்—II.**

**தமிழ்நாடு இணையவழி விளையாட்டு அதிகார அமைப்பு.**

தமிழ்நாடு இணையவழி விளையாட்டு அதிகார அமைப்பினை நிறுவுதல்.

3. (1) அரசானது, அறிவிக்கையின் மூலம், இந்தச் சட்டத்தின் கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயலுறுத்தவும், அதற்கு குறித்தொதுக்கப்பட்ட செயற்பணிகளை நிறைவேற்றவும் அறிவிக்கையில் குறிப்பிடலாகும் அத்தகைய தேதியிலிருந்து, தமிழ்நாடு இணையவழி விளையாட்டு அதிகார அமைப்பு என்று அழைக்கப்படும் ஓர் அதிகார அமைப்பை நிறுவலாம்.

(2) அதிகார அமைப்பானது அரசால் பெயர்குறிப்பிடப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத பதவியிலிருந்து ஓய்வுபெற்ற ஓர் அலுவலர்—தலைமையாளர்;

(b) காவல்துறை தலைவர் படிநிலைக்குக் குறையாத பதவியிலிருந்து ஓய்வுபெற்ற ஓர் அலுவலர்—உறுப்பினர்;

(c) தகவல் தொழில் நுட்பத்துறையில் புலமை வாய்ந்த ஒருவர்—உறுப்பினர்;

(d) சிறப்புமிக்க உளவியலாளர் ஒருவர்—உறுப்பினர்;

(e) இணையவழி விளையாட்டில் புலமை வாய்ந்த ஒருவர்—உறுப்பினர்.

(3) அதிகார அமைப்பின் தலைமையாளர் மற்றும் உறுப்பினர்கள், அரசால் தீர்மானிக்கப்படலாகும் அத்தகைய ஊதியம் மற்றும் படித்தொகைகளைப் பெறுதல் வேண்டும்.

(4) அரசானது அதிகார அமைப்பின், ஆலோசனையுடன் இந்தச் சட்டத்தின் கீழ் அதன் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் திறமையுடன் நிறைவேற்றுவதற்காக, தேவையெனக் கருதலாகும், அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை அதிகார அமைப்பிற்கு அளிக்கலாம்.

அதிகார அமைப்பின் செயற்பணிகள்.

4. (1) அதிகார அமைப்பானது பின்வரும் செயற்பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும், அதாவது:—

(a) இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல்;

(b) இணையவழி விளையாட்டு வழங்குநர்களுக்கு பதிவுச் சான்றிதழை வழங்குதல்;

(c) இணைப்புப் பட்டியலில் சேர்ப்பதற்காக, இணையவழி வாய்ப்பு விளையாட்டுக்களை அடையாளம் காணுதல் மற்றும் அரசிற்கு பரிந்துரைத்தல்;

(d) இம்மாநிலத்தில் இணையவழி விளையாட்டுகள் வழங்குநர்களின் செயற்பணிகளை மேற்பார்வையிடுதல்;

(e) இணையவழி விளையாட்டு வழங்குநர்களின் செயல்பாடுகள் தொடர்பான தகவல் மற்றும் தரவினை சேகரித்தல் மற்றும் பராமரித்தல்;

(f) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, தேவையெனக் கருதப்படும் போது, 2000ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசை வேண்டுதல்;

(g) இணையவழி விளையாட்டு வழங்குநர் எவருக்கும் எதிராக பெறப்பட்ட குறைகள் அல்லது புகார்களை முடிவு செய்தல்;

(h) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அரசுக்கு காலமுறை அறிக்கைகளை அனுப்புதல்;

(i) இணையவழி விளையாட்டு தொடர்பான பொருட்பாடு எதன்மீதும் அரசுக்கு ஆலோசனை கூறுதல்; மற்றும்

(j) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளை நிறைவேற்றுதல்.

(2) இந்தச் சட்டத்தின் கீழ் அதன் கடமைகளை திறம்பட நிறைவேற்றுவதற்கும், அதன் செயற்பணிகளை புரிவதற்கும், அதிகார அமைப்பானது அதன் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து, அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய எண்ணிக்கையிலான குழுக்களை அமைத்துருவாக்கலாம்.

ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**5. (1)** அதிகார அமைப்பானது, அறிவிக்கையின் மூலம், அரசின் முன் ஒப்புதலுடன், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்காக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுடன் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுடன் இணங்கி ஒழுங்குமுறை விதிகளை ஏற்படுத்தலாம்.

(2) குறிப்பாக மற்றும் மேற்கூறிய அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு பாதகமின்றி,—

(a) இணையவழி விளையாட்டுகளை விளையாடுவது தொடர்பான கால வரம்பு, பண வரம்பு, வயது வரம்பு அல்லது அத்தகைய பிற கட்டுப்பாடுகள்; மற்றும்

(b) அதன் செயல்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான செயல்முறை போன்றவற்றிற்காக அத்தகைய ஒழுங்குமுறைவிதிகளை வழங்கலாம்.

தகவலைப் பெறுவதற்கான அதிகாரம்.

**6. (1)** அதிகார அமைப்பு அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட எவரும், இந்தச் சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் அறிவிக்கப்பட்ட செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு, இணையவழி விளையாட்டு வழங்குநர் அல்லது இணையவழி விளையாட்டினை விளையாடுபவர் எவரிடமிருந்தும் தகவல் எதனையும் பெறுவதற்கு தேவைப்படலாகும் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(2) அதிகார அமைப்பானது, தேவையெனக் கருதலாகும் அத்தகைய தகவல்களை வழங்குவதற்கு, இணையவழி விளையாட்டு வழங்குநர் எவரையுமோ அல்லது இணையவழி விளையாட்டு இணையதளம் எதனில் பொறுப்பு வகிக்கக்கூடிய நபர் எவரையுமோ, இணையவழி விளையாட்டு தொடர்பான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளக்கூடிய நிறுவனத்தையோ அல்லது வளாகத்தையோ கோருவதற்கு ஆணை பிறப்பிக்கலாம்.

(3) அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி அதன் செயற்பாடுகள் எதனையும் நிறைவேற்றுகையில் பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்த வகையில், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு ஒன்றை விசாரிக்கும் போது உரிமையியல் நீதிமனறத்திடம் உற்றமைந்துள்ள அதே அதிகாரங்களைக் கொண்டிருக்கும், அதாவது:— மையச் சட்டம் V/1908.

(a) தரப்பினர் எவருக்கும் அழைப்பாணை விடுத்தல் மற்றும் நபரெவரின் வருகையை உறுதி செய்தல்;

(b) உறுதிமொழியின் மீது வாய்மொழி சாட்சியம் அல்லது பிரமாணப் பத்திரத்தின் மீது எழுதப்பட்ட சாட்சியத்தினைப் பெறுதல்;

(c) ஆவணம் எதனின் கண்டுபிடிப்பினையும் சமர்ப்பித்தலையும் கோருதல்;

(d) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதனிடமிருந்தும் பொது பதிவுரு எதனையுமோ அல்லது அதன் நகல்களையுமோ கோருதல்;

(e) சாட்சிகள் அல்லது ஆவணங்களை விசாரணை செய்வதற்கு அழைப்பாணை விடுத்தல்; மற்றும்

(f) வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

## அத்தியாயம்—III.

## பொதுவான தடைகள்.

இணையவழி சூதாட்டத்தையும், இணையவழி வாய்ப்பு விளையாட்டுகளையும் தடை செய்தல்.

7. (1) இணையவழி சூதாட்டமானது தடை செய்யப்பட்டுள்ளது.

(2) இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாய்ப்பு விளையாட்டுகளை பணம் அல்லது பிற பந்தயப் பொருட்களைக் கொண்டு விளையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

(3) இணையவழி விளையாட்டை வழங்குநர் எவரும், இணையவழி சூதாட்டங்களின் சேவையினை வழங்கவோ அல்லது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாய்ப்பு விளையாட்டு எதனையும் பணம் அல்லது பிற பந்தயப் பொருட்கள் கொண்டு விளையாடுவதையோ அல்லது ஒழுங்குமுறை விதிகளை மீறுகின்ற பிற இணையவழி விளையாட்டு எதனையும் விளையாடுவதையோ எந்த வடிவிலும் அனுமதித்தல் கூடாது.

விளம்பரப்படுத்துதலை தடை செய்தல்.

8. இணையவழி சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கோ அல்லது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாய்ப்பு விளையாட்டு எதனையும் பணம் அல்லது பிற பந்தயப் பொருட்களைக் கொண்டு விளையாடுவதற்கோ இம்மாநிலத்தில், நபர் எவரையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஊக்குவிக்கின்ற அல்லது தூண்டுகின்ற எதனையும் மின்னணு தொடர்பு வழிமுறைகள் உள்ளடங்களாக ஊடகம் எதிலும் நபர் எவரும் விளம்பரம் செய்தலோ அல்லது செய்யப்படுதலோ கூடாது.

நிதி பரிமாற்றத்திற்கான தடை.

9. எந்தவொரு வங்கியும், நிதி நிறுவனமும் அல்லது கட்டண நுழைவுவாயில் வழங்குநரும், இணையவழி சூதாட்டம் எதற்காகவும் அல்லது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாய்ப்பு விளையாட்டு எதற்காகவும் பணம் செலுத்துவதற்கான எந்தவொரு பரிவர்த்தனை அல்லது நிதி அங்கீகாரத்திலும் ஈடுபடுதல் கூடாது.

## அத்தியாயம்—IV.

## உள்ளூர் இணையவழி விளையாட்டுகள் வழங்குநர்களுக்கான ஒழுங்குமுறை விதிகள்.

உள்ளூர் இணையவழி விளையாட்டுகள் வழங்குநர்களின் பதிவு.

10. (1) குறிப்பிடப்பட்ட நாளன்றும் அது முதற்கொண்டும், உள்ளூர் இணையவழி விளையாட்டுகள் வழங்குநரானவர் அதிகார அமைப்பிடமிருந்து தக்கவாறு பெறப்பட்ட பதிவுச்சான்றிதழுக்கு இணங்கியவாறன்றி, எந்தவொரு இணையவழி விளையாட்டினையும் நடத்துவதற்கு சேவை எதனையும் வழங்குதல் கூடாது.

(2) இணையவழி விளையாட்டு எதனையும் நடத்துவதற்காக, சேவை எதனையும் வழங்குகின்ற உள்ளூர் இணையவழி விளையாட்டுகள் வழங்குநர் ஒவ்வொருவரும் குறிப்பிடப்பட்ட நாளுக்கு உடனடியாக முன்னர், இந்தச் சட்டத்தின் III—ஆம் அத்தியாயத்தில் அடங்கியுள்ள பொதுவான தடைகளுக்குட்பட்டு, குறிப்பிடப்பட்ட நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்கு மிகாதவொரு கால அளவிற்கு, அத்தகைய சேவையினை வழங்குவதைத் தொடரலாம்:

வரம்புரையாக, அத்தகைய உள்ளூர் இணையவழி விளையாட்டுகள் வழங்குநரானவர், குறிப்பிடப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்கள் கால அளவிற்குள் இந்தப் பிரிவின்படி பதிவு செய்தலுக்கான விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

(3) பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் அத்தகைய படிவத்தில் அதிகார அமைப்பிடம் செய்யப்படுதல் வேண்டும்.

(4) (3)ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டதின் பேரில், அதிகார அமைப்பானது, அது தேவையெனக் கருதலாகும் அத்தகைய விசாரணையை மேற்கொண்டதன் பின்பு, பதிவுச் சான்றிதழை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம்:

வரம்புரையாக, விண்ணப்பதாரருக்கு கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்பட்டாலன்றி, பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பமானது மறுக்கப்படுதலாகாது.

(5) ஒவ்வொரு பதிவுச் சான்றிதழும், பின்வரும் வரையறைகளுக்குட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய வடிவில் வழங்கப்படுதல் வேண்டும். அதாவது :–

(a) இணையவழி விளையாட்டுகள் வழங்குநரானவர், இணையவழி சூதாட்டங்களின் சேவை எதனையும் வழங்கவோ அல்லது இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாய்ப்பு விளையாட்டு எதனையும் பணம் அல்லது பிற பந்தயப் பொருட்களைக் கொண்டு விளையாடுவதையோ அனுமதித்தல் கூடாது;

(b) இணையவழி விளையாட்டுகள் வழங்குநரானவர், ஒழுங்குமுறைவிதிகளை மீறுகின்ற இணையவழி விளையாட்டு எதையும் விளையாட அனுமதிக்கவோ அல்லது அனுமதித்தலை ஏற்படுத்தவோ கூடாது.

(6) (5)ஆம் உட்பிரிவின் படி வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழானது மூன்று ஆண்டுகள் கால அளவிற்கு செல்லுந்தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

பதிவுச் சான்றிதழை இடைநிறுத்தம் செய்தல் மற்றும் திரும்பப் பெறுதல்.

11. (1) (a) இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் பொய்யாக அல்லது மோசடியின் மூலம் பெறப்பட்டது;

(b) பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர், வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழுக்குட்பட்டு, அதன் நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறிவிட்டார்; அல்லது

(c) பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர், இந்தச் சட்டம், விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகள் ஆகியவற்றின் வகைமுறைகள் எவற்றையும் மீறிவிட்டார், என இதன்பொருட்டு அதனிடம் ஏற்படுத்தப்பட்ட குறிப்பின் பேரிலோ அல்லது வேறுவிதமாகவோ அதிகார அமைப்பானது மனநிறைவடைந்தால், பின்னர், பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர் பொறுப்பேற்கக்கூடிய பிற நடவடிக்கைகள் எதற்கும் குந்தகமின்றி, அதிகார அமைப்பானது, அவருக்கு காரணம் காட்டுவதற்கான வாய்ப்பொன்றை வழங்கிய பின்பு, ஆணையொன்றின் மூலம் அதற்கான காரணங்களைக் கூறி பதிவுச் சான்றிதழை திரும்பப் பெறலாம்.

(2) (1)ஆம் உட்பிரிவில், அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், இணையவழி விளையாட்டு வழங்குநருக்கு வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழானது இடைநிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று அதிகார அமைப்பு முதன்நோக்கத்தினை கொண்டிருக்குமிடத்து, அதிகார அமைப்பானது, சான்றிதழை திரும்பப் பெறுவதற்கு முன்னர் எந்த நேரத்திலும், எழுத்துப்பூர்வமாக காரணங்களைப் பதிவு செய்யலாம்.

மேல்முறையீடு.

12. (1) 11ஆம் பிரிவின் கீழ் பதிவுச் சான்றிதழை திரும்பப்பெறும் அல்லது இடைநிறுத்தம் செய்யும் அதிகார அமைப்பின் ஆணையொன்றின் மூலம் பாதிக்கப்பட்ட நபர் எவரும், ஆணையானது அவருக்குத் தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடம், மேல்முறையீடு செய்யலாம்:

வரம்புரையாக, அந்த கால அளவிற்குள் மேல்முறையிட்டினை தாக்கல் செய்யாததற்குப் போதுமான காரணம் இருப்பதாக அதிகார அமைப்பானது மனநிறைவடைந்தால், அது கூறப்பட்ட பதினைந்து நாட்கள் காலவதியான பின்பும் மேல்முறையீட்டினை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) மேல்முறையீட்டு அதிகார அமைப்பானது, மேல்முறையீட்டாளருக்கு கேட்பதற்கான நியாயமான வாய்ப்பொன்று வழங்கப்பட்ட பின்பு, மேல்முறையீடு பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத கால அளவினை மீறாத நேர்வு எதிலும், முடிந்தவரையில் அதனை முடிவு செய்தல் வேண்டும்.

மேல்முறையீட்டு அதிகார அமைப்பினை நிறுவுதல்.

13. (1) அரசானது, அறிவிக்கையின் மூலம் தலைமையாளர் மற்றும் இரண்டு பிற உறுப்பினர்களுக்கு மிகாதவர்களைக் கொண்டிருக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு ஒன்றினை நிறுவலாம்.

(2) அவர் உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவோ அல்லது உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாவதற்கு தகுதியுடைய நபராகவோ இருந்தாலன்றி மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் தலைமையாளராக நியமிக்கப்படுவதற்கு நபரொருவர் தகுதியுடையவராகார்.

(3) மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் உறுப்பினர்களின் நியமனத்திற்கான தகுதிகளானது வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(4) மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் தலைமையாளர் மற்றும் உறுப்பினர்கள், அரசால் தீர்மானிக்கப்படலாகும் அத்தகைய ஊதியம் மற்றும் படித்தொகைகளைப் பெறுதல் வேண்டும்.

(5) அரசானது மேல்முறையீட்டு அதிகார அமைப்பின், ஆலோசனையுடன் இந்தச் சட்டத்தின் கீழ் அதன் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் திறமையுடன் நிறைவேற்றுவதற்காக, தேவையெனக் கருதலாகும், அத்தகைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை மேல்முறையீட்டு அதிகார அமைப்பிற்கு அளிக்கலாம்.

(6) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, மேல்முறையீட்டு அதிகார அமைப்பானது அதன் சொந்த நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்தலாம்.

## அத்தியாயம்–V.

## உள்ளூர் அல்லாத இணையவழி விளையாட்டு வழங்குநர்களுக்கான ஒழுங்குமுறை விதிகள்.

கட்டுப்பாடுகள்.

14. (1) இம்மாநிலத்தில், உள்ளூர் அல்லாத இணையவழி விளையாட்டு வழங்குநர் எவரும்,–

(a) இணையவழி சூதாட்ட சேவை எதனையும் வழங்குதல்;

(b) இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாய்ப்பு விளையாட்டு எதையும் பணம் அல்லது பிற பந்தைய பொருட்களுடன் விளையாட அனுமதித்தல்; அல்லது

(c) விதிமுறைகளுக்கு மாறாக பிற இணையவழி விளையாட்டு எதையும் விளையாட அனுமதித்தல் கூடாது.

(2) உள்ளூர் அல்லாத இணையவழி விளையாட்டுகள் வழங்குநர், அவர் உரிய கவனத்துடன் செயல்பட்டிருந்தால் அல்லது அந்த நோக்கத்திற்காக பயனரின் புவியியல் இருப்பிடத்தின் அடிப்படையில் இணைய உள்ளடக்கத்தினை தடை செய்தலை இம்மாநிலத்தில் வழங்கியிருந்தால் அவர், (1) ஆம் உட்பிரிவை மீறியதாகக் கருதப்படமாட்டார்.

(3) (2) ஆம் உட்பிரிவின் நோக்கத்திக்காக, உள்ளூர் அல்லாத இணையவழி விளையாட்டு வழங்குநர், பின் வருவனவற்றைக் கொண்டிருந்தால் உரிய கவனத்துடன் செயல்பட்டதாகக் கருதப்படுவார்,—

(a) இம்மாநிலத்தில் இயல்ரீதியாக (physically present) இருக்கும் வாடிக்கையாளர்களுக்கு இணையவழி சூதாட்டத்தையும் சில இணையவழி விளையாட்டுகள் விளையாடுவதையும் இம்மாநிலம் தடைசெய்கிறது என வருங்கால வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தல்;

(b) இம்மாநிலத்தில் வாடிக்கையாளர்கள் இயல்ரீதியாக இருந்தால், வாடிக்கையாளர்கள் சேவையைப் பயன்படுத்தக் கூடாது என்ற வெளிப்படையான நிபந்தனையுடன் ஒப்பந்தங்களில் நுழைதல்;

(c) இம்மாநிலத்தில் வாடிக்கையாளர்கள் இயல்ரீதியாக இல்லை என்பதை உறுதிப்படுத்த போதுமான தனிப்பட்ட விவரங்களை வழங்குதல்;

(d) தொடர்புடைய வாடிக்கையாளர்களின் கணக்குகள் திறக்கப்பட்ட போதும் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கப்பட்ட காலம் முழுவதும் இம்மாநிலத்தில் வாடிக்கையாளர்கள் இயல்ரீதியாக இல்லை என்பதை குறிப்பிடும் தரவுகளை அளித்தல்; மற்றும்

(e) இம்மாநிலத்தில் இயல்ரீதியாக இருக்கும் நபர் எவரும் இணையவழி சூதாட்ட சேவையையோ அல்லது 7ஆம் பிரிவின்கீழ் தடை செய்யப்பட்ட இணையவழி வாய்ப்பு விளையாட்டையோ அணுக முடியாது என்பதை உறுதிப்படுத்த மற்ற அனைத்து நியாயமான நடவடிக்கைகளையும் எடுத்திருத்தல்.

கட்டுப்பாடுகளுக்கு இணங்காததை கையாளுவதற்கான நடைமுறை.

**15.** (1) 14 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் எதற்கும் இணங்கத் தவறிய உள்ளூர் அல்லாத விளையாட்டு வழங்குநர்கள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் பதிலை வழங்குவதற்காக, அதிகார அமைப்பால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும், முறையிலும் காரணம் கேட்கும் அறிவிப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும். பதில் எதுவும் பெறப்படவில்லை அல்லது பெறப்பட்ட பதில் திருப்திகரமாக இல்லை எனில், அதிகார அமைப்பானது (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளுக்குட்பட்டு நடவடிக்கையைத் தொடரலாம்.

(2) அதிகார அமைப்பானது, உள்ளூர் அல்லாத இணையவழி விளையாட்டு வழங்குநரால் வழங்கப்படும் சேவையை இந்த மாநிலத்தில் உள்ள நபர்கள் அணுகுவதைத் தடைசெய்ய, 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் 69–A ஆம் பிரிவின் கீழ் அதிகாரத்தைச் செயலுறுத்துவதற்கு, நேர்விற்கேற்ப மைய அரசு அல்லது இதன்பொருட்டு மைய அரசால் அதிகாரமளிக்கப்பட்ட தனி அலுவலரிடம் கோருவதற்கு அரசிடம் பரிந்துரை செய்தல் வேண்டும்: மையச்சட்டம் 21/2000.

வரம்புரையாக,—

(a) எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்ய வேண்டிய காரணங்களுக்காக, அதிகார அமைப்பின் பரிந்துரையின்படி செயல்பட அரசு மறுக்கலாம்; அல்லது

(b) அதிகார அமைப்பின் பரிந்துரையை அரசு ஏற்கும் பட்சத்தில், பரிந்துரை பெறப்பட்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மைய அரசிடம் சாதாரணமாக கோரிக்கையை செய்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகார அமைப்பினால் செய்யப்பட்ட பரிந்துரையின் நகல், தொடர்புடைய உள்ளூர் அல்லாத இணையவழி விளையாட்டு வழங்குநருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்–VI.

## குற்றச் செயல்கள் மற்றும் தண்டனைகள்

7, 8, 10 மற்றும் 14–ஆம் பிரிவுகளை மீறுதலுக்கான தண்டனைகள்

16. (1) இணையவழி சூதாட்டத்தில் ஈடுபடுகின்ற அல்லது இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாய்ப்பு விளையாட்டு எதனையும் விளையாடும், பணம் அல்லது பிற பந்தையப் பொருட்கள் கொண்டு 7–ஆம் பிரிவினை மீறுகின்ற அல்லது ஒழுங்குமுறைவிதிகளை மீறுகின்றவாறு பிற இணையவழி விளையாட்டு எதனையும் விளையாடுகின்ற நபர் எவரும், மூன்று மாதங்கள் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலஅளவிற்கு சிறை தண்டனை அல்லது ஐந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) 8 ஆம் பிரிவுக்கு முரணாக ஊடகம் எதிலும் விளம்பரத்தினை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்தக் காரணமாக இருக்கின்ற நபர் எவரும், ஓர் ஆண்டு வரை நீட்டிக்கலாகும் ஒரு காலஅளவிற்கு சிறை தண்டனை அல்லது ஐந்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(3) இணையவழி சூதாட்ட சேவை அல்லது இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி வாய்ப்பு விளையாட்டு எதையும் பணம் அல்லது பிற பந்தையப் பொருட்கள் கொண்டு வழங்குகின்ற நபர் எவரும் அல்லது 10–ஆம் பிரிவின் (1), (2) அல்லது (5)–ஆம் உட்பிரிவின் அல்லது 14–ஆம் பிரிவின் வகைமுறைகளை மீறுகின்ற நபர் எவரும், மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலஅளவிற்கு சிறை தண்டனை அல்லது பத்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மையச்சட்டம் 21/2000.

வரம்புரையாக, மைய அரசு அல்லது இதன்பொருட்டு மைய அரசால் அதிகாரமளிக்கப்பட்ட தனி அலுவலரால், 2000–ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 69–Aஆம் பிரிவின்படி அதிகாரமானது செயல்படுத்தப்பட்டால் மட்டுமே 14–ஆம் பிரிவினை மீறியதற்காக உள்ளூர் அல்லாத இணையவழி விளையாட்டுகளின் வழங்குநரானவர் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(4) (a) (2)–ஆம் உட்பிரிவின் கீழ் குற்றம் ஒன்றிற்காக தண்டிக்கப் பெற்ற நபர் எவரும், அதே வகைமுறையின் கீழ் மீண்டும் ஒரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டால், அவர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஒவ்வொரு குற்றத்திற்கும் ஓர் ஆண்டுக்குக் குறையாத, ஆனால் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலஅளவிற்கு சிறை தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் ஐந்து லட்சம் ரூபாய்க்குக் குறையாத, ஆனால் பத்து லட்ச ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதமும் சேர்த்து விதிக்கப்படுதல் வேண்டும்.

(b) (3)–ஆம் உட்பிரிவின் கீழ் குற்றம் ஒன்றிற்காக தண்டிக்கப் பெற்ற நபர் எவரும், அதே வகைமுறையின் கீழ் மீண்டும் ஒரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டால், அவர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஒவ்வொரு குற்றத்திற்கும் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத, ஆனால் ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு காலஅளவிற்கு சிறை தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் பத்து லட்சம் ரூபாய்க்குக் குறையாத, ஆனால் இருபது லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் அபராதமும் சேர்த்து விதிக்கப்படுதல் வேண்டும்.

குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

17. நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டம், இதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகளின் படி தண்டிக்கப்படலாகும் குற்றம் எதனையும், அதிகார அமைப்பினால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப் பெற்ற அலுவலர் எவராலும் செய்யப்பட்ட எழுத்துப் பூர்வமான முறையீட்டினாலன்றி, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

குற்றங்களை சட்டப்படி சமரசம் செய்து கொள்வதற்கான அதிகாரம்.

18. (1) இதன்பொருட்டு அறிவிக்கையின் மூலம் அரசால் சிறப்பு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் எவரும், அத்தகைய குற்றத்தின் தீர்வு உடன்பாட்டினால் 16–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு குற்றத்தை செய்த நபர் எவரிடமிருந்தும் அத்தகைய குற்றத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள அபராதத் தொகையின் அதிகபட்ச அளவிற்கு மேற்படாத ஆனால் கூறப்பட்ட தொகையின் ஐம்பது விழுக்காட்டிற்கு குறையாத ஒரு மொத்த தொகையினை ஏற்றுக் கொள்ளலாம்.

(2) அத்தகைய அலுவலருக்கு, அத்தகைய மொத்த தொகையினை செலுத்தியதன் பெயரில், குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சிறைக்காவலில் இருந்தால், அவர் விடுவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவருக்கு எதிராக, அத்தகைய குற்றம் தொடர்பாக மேல் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுதலாகாது.

(3) (1)–ஆம் உட்பிரிவின் கீழ் குற்றம் ஒன்றை சட்டப்படி சமரசம் செய்துகொள்ள, நபரெவருக்கும் ஒரேஒரு முறை மட்டுமே அனுமதியானது வழங்கப்படுதல் வேண்டும்.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.

19. (1) இந்தச் சட்டத்தின்படியான குற்றம் நிறுமம் ஒன்றினால் செய்யப்பட்டிருக்கிறவிடத்து, அந்தக் குற்றம் செய்யப்பட்ட நேரத்தில், அந்த நிறுமத்தின் அலுவலை நடத்தி வருவதற்கு, அந்த நிறுமத்தின் பொறுப்பைக் கொண்டிருந்தவரும், அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அதோடு அந்த நிறுமமும், அந்தக் குற்றத்தினைச் செய்ததாகக் கருதப்படுதலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுதலும், தண்டிக்கப்படுதலும் வேண்டும்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அந்தக் குற்றம் தமக்குத் தெரியாமல் செய்யப்பட்டதாக அல்லது அத்தகைய குற்றம் செய்யப்படாமல் தடுக்க தாம் உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டதாக நபர் எவரும் மெய்ப்பிப்பாரானால், அவரை தண்டனை எதற்கும் உள்ளாக்குதலாகாது.

(2) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், குற்றம் எதுவும் ஒரு நிறுமத்தினால் செய்யப்பட்டிருந்து, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது 2013–ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டவாறான முக்கிய நிர்வாக பணியாளர்கள் உள்ளடங்கலான பிற அலுவலர் எவரின் இசைவுடனோ, மறைமுக ஆதரவுடனோ அந்தக் குற்றம் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அவர்பாலுள்ள கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து, அந்த இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது முக்கிய நிர்வாக பணியாளர்கள் உள்ளடங்கலான பிற அலுவலர் அந்தக் குற்றதைச் செய்திருப்பதாகக் கருதப்படுதலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

மையச் சட்டம் 18/2013.

**விளக்கம்.-** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக–

(a) 'நிறுமம்' என்பது கூட்டமைப்பு எதுவும், என்று பொருள்படும் மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்; மற்றும்

(b) 'இயக்குநர்' என்பது, ஒரு நிறுவகத்தைப் பொறுத்தவரையில், அந்த நிறுவகத்திலுள்ள ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.

## அத்தியாயம்–VII.

### பல்வகை.

அதிகார அமைப்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் தலைமையாளர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் முதலானோர் பொது ஊழியர்கள் ஆவர்.

20. இந்தச் சட்டத்தின் வகை முறைகள் எதனையும் ஒட்டி செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்றபோது, அதிகார அமைப்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் தலைமையாளர், ஒவ்வொரு உறுப்பினர்களும், அதிகார அமைப்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் பொருளின்படி, பொது ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் XLV/1860.

**21.** இந்தச் சட்டம், விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளின்படி, அவரது அலுவலக செயல்பாடுகளை நிறைவேற்ற அல்லது அவரது அதிகாரங்களை பயன்படுத்த நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதற்காகவும், பொது ஊழியர்கள் எவருக்கும் எதிராக, உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

நல்ல எண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**22.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளானது, கூடுதலாக இருக்குமேயன்றி, அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டத்தின் வகைமுறைகள் எதனின் மதிப்பினையும் குறைப்பதில்லை.

இந்தச் சட்டம், பிற சட்டங்களின் மதிப்பினை குறைப்பதில்லை.

**23.** (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விளையாட்டு எதுவும் ஒரு இணையவழி வாய்ப்பு விளையாட்டு எனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) அரசு அறிவிப்பின் மூலம், அதிகார அமைப்பின் பரிந்துரையின் பேரில், இணைப்புப் பட்டியலில் ஏதேனும் இணையவழி விளையாட்டு எதையும் தவிர்க்கலாம் அல்லது சேர்க்கலாம் மற்றும் அத்தகைய அறிவிக்கையை வெளியிடும்போது, இணைப்புப் பட்டியல் அதற்கேற்ப திருத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இணையவழி வாய்ப்பு விளையாட்டு எனக் கருதப்படுதல் மற்றும் இணைப்புப் பட்டியலை திருத்துவதற்கான அதிகாரம்.

**24.** (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது அதன்பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும்; எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**25.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையின் வாயிலாக, அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவைப்படலாகும் அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

நீக்கறவு.

26. 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2022.

**இணைப்புப் பட்டியல்.**

**[23 ஆம் பிரிவைக்காண்க]**

**இணையவழி வாய்ப்பு விளையாட்டுகள்.**

(1) ரம்மி

(2) போக்கர்

### நோக்கக் காரண விளக்கவுரை

குடிமக்களின் மனநலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும், பந்தயம் கட்டுதல் உட்பட எந்த வடிவத்திலும் சூதாட்டத்தின் தீய விளைவுகளிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பும் அரசிற்கு உள்ளது. இதன் காரணத்தால், 1930–ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் III/1930) மற்றும் 1888–ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் III/1888) ஆகியவற்றில் பிரதிபலிக்கும் வகையில், தனிநபர் சூதாட்டம் மற்றும் பந்தயம் கட்டுதல் ஆகியவற்றை தடை செய்யும் நீண்டகாலக் கொள்கையை அரசு பேணி வருகிறது. இணையவழி விளையாட்டின் பரவல், குறிப்பாக அடிமையாக்கும் இணையவழி விளையாட்டுகள் மற்றும் இணையம் வழியாக விளையாடப்படும் சூதாட்ட விளையாட்டுகள் அரசின் முயற்சிகளை முறியடிக்க அச்சுறுத்துகிறது. முதலாவதாக, மின்னணு தகவல் தொடர்பு மூலம் சூதாட்டமானது, எல்லா நேரங்களிலும் எந்த இடத்திலிருந்தும், தொலைத்தொடர்பு திறன் கொண்ட சாதனத்தை அணுகக்கூடிய நபர் எவருக்கும் கிடைக்கிறது. இரண்டாவதாக இணையவழி சூதாட்டம் மனிதர்கள் அல்லாத/ கணினி பங்கேற்பாளர்களுடன் போட்டியிடும் வீரர்களை உள்ளடக்கியது, அவை பல்வேறு கணினி நெறிமுறைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அத்தகைய தொலைதூர விளையாட்டுகளில் ஈடுபடும் வாய்ப்பு அல்லது திறமையின் படிநிலை, தொடர்புடைய கணினி நெறிமுறை அல்லது நிரலாக்கத்தை (Program) தனியாக மதிப்பீடு செய்ய முடியாது. இறுதியாக, தொலைநிலையான சூதாட்டம் பெரும்பாலும் மாநிலங்களின் நிதிக்கண்காணிப்பை தவிர்த்து, இணைய பணப்பரிமாற்றங்கள் மற்றும் அடையாள வில்லை (Tokens) மூலம் நடைபெறுகிறது. இவ்வாறு இணையவழி சூதாட்டம் மக்களின் மன நலத்தை கணிசமாக பாதிக்கிறது மற்றும் பல குடும்பங்களை நிதி நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது. மேலும், மாநில மற்றும் அதன் மக்கட்தொகையில் நீண்டகால வாய்ப்புகளை பாதிக்கிறது.

2. இதேபோல, சூதாட்டம் மற்றும் பந்தயம் கட்டுதல் போன்ற தொடர்பில்லாத பிற இணையவழி விளையாட்டுகளும் தனிப்பட்ட, குடும்ப, சமூக, கல்வி, தொழில் அல்லது பொது மக்களின் செயல்பாட்டின் பிற முக்கியப் பகுதிகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், இந்த விளையாட்டுகளினால் பள்ளி மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர், இதன் விளைவாக, நுண்ணறிவு பலம், எழுதும் திறன் மற்றும் படைப்பாற்றல் ஆகியன குறைகின்றன.

3. இதனால், இணையவழி சூதாட்டம் மற்றும் இணையவழி விளையாட்டுகள் இயற்கையில் அடிமையாக்கும் தன்மை கொண்டவை மற்றும் தகுதிவாய்ந்த ஒழுங்குமுறைவிதிகளை வடிவமைப்பதில் சிரமங்களை ஏற்படுத்தும் போது, அது பொது ஒழுங்கிற்கான அச்சுறுத்தலை பன்மடங்கு அதிகரிக்கிறது. இணையவழி விளையாட்டுகளின் மீது புதிய சட்டத்தை இயற்றுவதற்கு, அரசுக்கு அறிவுரை வழங்குவதற்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு.K.சந்துரு அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட குழுவானது அதன் அறிக்கையில், விளையாட்டு எதனின் இணையவழி பதிப்பானது சீரற்ற வெளியீட்டு உருவாக்கி (Random Outcome Generators) எதிலும் ஈடுபடாத வார்த்தை விளையாட்டுகள் அல்லது பலகை விளையாட்டுகளின் நேர்வுகளைத் தவிர அந்த விளையாட்டின் இணையவழியல்லாத பதிப்புடன் ஒப்பிட முடியாது மற்றும் சீரற்ற உருவாக்கியை (Random Generators) உள்ளடக்கிய இணையவழி வாய்ப்பு விளையாட்டுகளை உருவாக்குபவர்களுக்கு தெரியும் என்பதால் அவை போலியான சீரற்ற உருவாக்கிகள் (Psuedo Random Generators) ஆகும்; அத்தகைய விளையாட்டுகள் இயந்திரத்துடன் விளையாடக்கூடியவை; அத்தகைய விளையாட்டு முறைகளை மேற்பார்வையிட இயங்கமைவு எதுமில்லை: மற்றும் அந்த விளையாட்டுகளை கையாளவும், தொடர் ஈடுபாட்டிற்கு விளையாட்டாளர்களை கவர்ந்திழுக்கவும், செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படலாம் என்பது போன்ற பல்வேறு வரைக்கூறுகளைக் கண்டறிந்துள்ளது.

4. மேற்கூறப்பட்ட குழுவின் அறிக்கை, அரசுப்பள்ளி மாணவர்களின் மீது இணையவழி விளையாட்டுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பள்ளி ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள், இது குறித்த ஆராய்ச்சி ஆய்வுகள் மற்றும் பங்கேற்பாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் பல்வேறு சட்டங்களை ஆய்வு செய்த பின்னர் அதன்படி உள்ள முடிவுகள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்த பின்னர், அரசானது, இணையவழி சூதாட்டங்களை தடைசெய்வதெனவும், இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதெனவும் முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2022) 2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாள் அன்று மாண்புமிகு ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டு, அது, 2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு*** *சிறப்பிதழில்* வெளியிடப்பட்டது.

5. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்கூறப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றி அமைக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

**2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2022) பிறப்பிக்கப்பட்டதைத் தேவையானதாக்கிய சூழ்நிலைகளை விளக்குகின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 168–ஆம் விதியின்படியான விவர அறிக்கை.**

குடிமக்களின் மனநலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும், பந்தயம் கட்டுதல் உட்பட எந்த வடிவத்திலும் சூதாட்டத்தின் தீய விளைவுகளிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பும் அரசிற்கு உள்ளது. இதன் காரணத்தால், 1930–ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் III/1930) மற்றும் 1888–ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் III/1888) ஆகியவற்றில் பிரதிபலிக்கும் வகையில், தனிநபர் சூதாட்டம் மற்றும் பந்தயம் கட்டுதல் ஆகியவற்றை தடை செய்யும் நீண்டகாலக் கொள்கையை அரசு பேணி வருகிறது. இணையவழி விளையாட்டின் பரவல், குறிப்பாக அடிமையாக்கும் இணையவழி விளையாட்டுகள் மற்றும் இணையம் வழியாக விளையாடப்படும் சூதாட்ட விளையாட்டுகள் அரசின் முயற்சிகளை முறியடிக்க அச்சுறுத்துகிறது. முதலாவதாக, மின்னணு தகவல் தொடர்பு மூலம் சூதாட்டமானது, எல்லா நேரங்களிலும் எந்த இடத்திலிருந்தும், தொலைத்தொடர்பு திறன் கொண்ட சாதனத்தை அணுகக்கூடிய நபர் எவருக்கும் கிடைக்கிறது. இரண்டாவதாக இணையவழி சூதாட்டம் மனிதர்கள் அல்லாத/கணினி பங்கேற்பாளர்களுடன் போட்டியிடும் வீரர்களை உள்ளடக்கியது, அவை பல்வேறு கணினி நெறிமுறைகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அத்தகைய தொலைதூர விளையாட்டுகளில் ஈடுபடும் வாய்ப்பு அல்லது திறமையின் படிநிலை, தொடர்புடைய கணினி நெறிமுறை அல்லது நிரலாக்கத்தை (Program) தனியாக மதிப்பீடு செய்ய முடியாது. இறுதியாக, தொலைநிலையான சூதாட்டம் பெரும்பாலும் மாநிலங்களின் நிதிக்கண்காணிப்பை தவிர்த்து, இணைய பணப்பரிமாற்றங்கள் மற்றும் அடையாள வில்லை (Tokens) மூலம் நடைபெறுகிறது. இவ்வாறு இணையவழி சூதாட்டம் மக்களின் மன நலத்தை கணிசமாக பாதிக்கிறது மற்றும் பல குடும்பங்களை நிதி நெருக்கடியில் ஆழ்த்தியுள்ளது. மேலும், மாநில மற்றும் அதன் மக்கட்தொகையில் நீண்டகால வாய்ப்புகளை பாதிக்கிறது.

2. இதேபோல, சூதாட்டம் மற்றும் பந்தயம் கட்டுதல் போன்ற தொடர்பில்லாத பிற இணையவழி விளையாட்டுகளும் தனிப்பட்ட, குடும்ப, சமூக, கல்வி, தொழில் அல்லது பொது மக்களின் செயல்பாட்டின் பிற முக்கியப் பகுதிகளில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும், இந்த விளையாட்டுகளினால் பள்ளி மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர், இதன் விளைவாக, நுண்ணறிவு பலம், எழுதும் திறன் மற்றும் படைப்பாற்றல் ஆகியன குறைகின்றன.

3. இதனால், இணையவழி சூதாட்டம் மற்றும் இணையவழி விளையாட்டுகள் இயற்கையில் அடிமையாக்கும் தன்மை கொண்டவை மற்றும் தகுதிவாய்ந்த ஒழுங்குமுறைவிதிகளை வடிவமைப்பதில் சிரமங்களை ஏற்படுத்தும் போது, அது பொது ஒழுங்கிற்கான அச்சுறுத்தலை பன்மடங்கு அதிகரிக்கிறது. இணையவழி விளையாட்டுகளின் மீது புதிய சட்டத்தை இயற்றுவதற்கு, அரசுக்கு அறிவுரை வழங்குவதற்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. K. சந்துரு அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட குழுவானது அதன் அறிக்கையில், விளையாட்டு எதனின் இணையவழி பதிப்பானது சீரற்ற வெளியீட்டு உருவாக்கி (Random Outcome Generators) எதிலும் ஈடுபடாத வார்த்தை விளையாட்டுகள் அல்லது பலகை விளையாட்டுகளின் நேர்வுகளைத் தவிர அந்த விளையாட்டின் இணையவழியல்லாத பதிப்புடன் ஒப்பிட முடியாது மற்றும் சீரற்ற உருவாக்கியை (Random Generators) உள்ளடக்கிய இணையவழி வாய்ப்பு விளையாட்டுகளை உருவாக்குபவர்களுக்கு தெரியும் என்பதால் அவை போலியான சீரற்ற உருவாக்கிகள் (Psuedo Random Generators) ஆகும்; அத்தகைய விளையாட்டுகள் இயந்திரத்துடன் விளையாடக்கூடியவை; அத்தகைய விளையாட்டு முறைகளை மேற்பார்வையிட இயங்கமைவு எதுமில்லை: மற்றும் அந்த விளையாட்டுகளை கையாளவும், தொடர் ஈடுபாட்டிற்கு விளையாட்டாளர்களை கவர்ந்திழுக்கவும், செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படலாம் என்பது போன்ற பல்வேறு வரைக்கூறுகளைக் கண்டறிந்துள்ளது.

4. மேற்கூறப்பட்ட குழுவின் அறிக்கை, அரசுப்பள்ளி மாணவர்களின் மீது இணையவழி விளையாட்டுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பள்ளி ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகள், இது குறித்த ஆராய்ச்சி ஆய்வுகள் மற்றும் பங்கேற்பாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் பல்வேறு சட்டங்களை ஆய்வு செய்த பின்னர், அதன்படி உள்ள முடிவுகள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்த பின்னர் அரசானது, இணையவழி சூதாட்டங்களை தடைசெய்வதெனவும், இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதெனவும் முடிவு செய்தது.

5. அப்போது சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாமல் இருந்த காரணத்தினால், அரசின் மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக, அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பிப்பது தேவையானதாயிற்று. அதற்கிணங்கிய வகையில், 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2022) 2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாள் அன்று மாண்புமிகு ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டு, அது, 2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு*** *சிறப்பிதழில்* வெளியிடப்பட்டது.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 3(1) & (3), 4(1) (h) & (j), 5(1), 6(3), 10(3), 10(5), 13(1), 13(3), 13(4), 15(1), 18(1), 23(2), 24(1) மற்றும் 25 ஆகிய கூறுகளானவை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நேர்விற்கேற்ப, அறிவிக்கைகள் அல்லது ஆணைகளை வழங்குவதற்கு அல்லது விதிகளை அல்லது ஒழுங்குமுறைவிதிகளை உருவாக்குவதற்கு 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவானது அரசு, தமிழ்நாடு இணையவழி விளையாட்டு அதிகார அமைப்பு மற்றும் தமிழ்நாடு இணையவழி விளையாட்டு மேல்முறையீட்டு அதிகார அமைப்பு ஆகியவற்றிற்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்டமுன்வடிவானது சட்டமாக இயற்றப்படும் போது மற்றும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்போது மாநிலத் தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக மாநிலத் தொகு நிதியத்திலிருந்து ஏற்படக்கூடிய செலவினத்தை மிகத் துல்லியமாக எந்தக் கோணத்திலும் மதிப்பிட இயலாது.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 19.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

**2022**–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் **19**–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130**–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 54/2022**

**1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்திமூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:

**1.** **(1)** இந்தச் சட்டம், 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**(2)** இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

**2.** 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 34–ஆம் பிரிவில், **(1)** ஆம் உட்பிரிவில், (c) கூறிலுள்ள (ii) ஆம் உட்கூறானது, (iii) ஆம் உட்கூறாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு (iii) ஆம் உட்கூறாக மறுஎண்ணிடப்படுவதற்கு முன்பு, பின்வரும் உட்கூறு மற்றும் வரம்புரையானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 34–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(ii) கூட்டுறவுச் சங்கம் எதிலும் பணியில் உள்ள அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் அல்லது தணிக்கையில் ஈடுபட்டுள்ள அரசுப் பணியாளர் ஒருவர்:

வரம்புரையாக, கூட்டுறவுச் சங்கத்தின் அத்தகைய பணியாளர்கள் அல்லது அத்தகைய அரசுப் பணியாளர்களை பிரத்தியேகமாகக் கொண்ட, பதிவு செய்யப்பட்ட சங்கம் எதனின் நிருவாகக்குழுவின் உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்து அல்லது நியமிக்கப்படுவதிலிருந்து, நபர் ஒருவருக்கு (ii) ஆம் உட்கூறிலுள்ள தகுதியின்மையானது பொருந்தாது; அல்லது".

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 34—ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவானது, மற்றவற்றிற்கிடையில், கூட்டுறவுச் சங்கம் எதிலும் பணியமர்த்தப்பட்டிருந்து அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் அல்லது தணிக்கையில் அரசுப் பணியாளராக ஈடுபட்டிருந்து மற்றும் அவ்வாறு இருந்து பதவி விலகிய நாளிலிருந்து இரண்டாண்டு காலம் முடிவடையாதிருக்கும் நபர் ஒருவரை, பதிவுபெற்ற சங்கம் எதனின் நிருவாகக்குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்து அல்லது நியமனம் செய்யப்படுவதிலிருந்து தகுதிநீக்கம் செய்கிறது. ஆனால், தற்சமயம் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் பணியில் இருப்பவர் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் அல்லது தணிக்கையில் ஈடுபட்டிருக்கும் அரசுப் பணியாளரை, பதிவுபெற்ற சங்கம் எதனின் நிருவாகக்குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்து அல்லது நியமனம் செய்யப்படுவதிலிருந்து கூறப்பட்ட பிரிவானது தகுதியற்றவராக்கவில்லை.

2. எனவே, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 30/1983ஐ தக்கவாறு திருத்தம் செய்வதன் மூலம் இந்த குறைபாட்டினைக் களைய அரசு முடிவு செய்துள்ளது.

3. இச்சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 19.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

**2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 55/2022**

## 1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1982.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1982–ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில்,–

(1) (1)ஆம் உட்பிரிவில்,–

(a) ‘‘வேந்தர்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘அரசு’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) அந்த வரம்புரையில், ‘‘வேந்தர்’’ மற்றும் ‘‘அவர்’’ எனும் சொற்றொடர்களுக்காக, முறையே, ‘‘அரசு’’ மற்றும் ‘‘அவர்கள்’’ எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2)ஆம் உட்பிரிவில்,–

(a) (i)ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘(i) அரசின் இரண்டு பேராளர்களில், ஒருவர், உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றம் ஒன்றின் ஒய்வுபெற்ற நீதிபதியாக இருத்தல் வேண்டும், மற்றும் மற்றொருவர், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கும் குறையாத மாநில அரசின் ஒய்வுபெற்ற அல்லது பதவியிலுள்ள அலுவலராக இருத்தல் வேண்டும் அல்லது சிறந்த கல்வியாளராக இருத்தல் வேண்டும்’’;

(b) (ii)ஆம் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (2–A)–ஆம் உட்பிரிவில், (i) ஆம் கூறில், ‘‘வேந்தருடன் கலந்தாய்வு செய்து’’ எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) (2–B)–ஆம் உட்பிரிவில், ‘‘வேந்தர்’’ எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (2–D)–ஆம் உட்பிரிவில், ‘‘வேந்தர்’’ எனும் சொற்றொடருக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களில், ‘‘அரசு’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) (3)–ஆம் உட்பிரிவிற்கான, இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில் உள்ள, ‘‘வேந்தர்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘அரசு’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(7) (4)–ஆம் உட்பிரிவில், ‘‘வேந்தர்’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘அரசு’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

12–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டத்தின் 12–ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"12–A. **துணைவேந்தரை நீக்குதல்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மேற்கொள்ள மறுத்தல் அல்லது வேண்டுமென்றே செயல்படாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களைத் தவறாக பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் பிறப்பிக்கப்பட்ட அரசின் ஆணை ஒன்றினாலன்றி, துணைவேந்தரானவர் அவரின் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவிநீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட ஒரு நேர்வில், அரசானது.–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத அரசு அலுவலராக இருக்கிற ஒருவரினால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை நீக்கத்திற்கான ஆணை ஒன்றினைச் செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்கக் கோருதல் வேண்டும்.".

## நோக்கக் காரண விளக்கவுரை

முன்னதாக, குஜராத், தெலுங்கானா மற்றும் கர்நாடகா மாநிலங்களின், குறித்த சில மாநில பல்கலைக்கழகச் சட்டங்களின் வழியில், மாநில பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமனம் செய்வதற்கும், அதன்படி அவர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கும் அரசானது முடிவு செய்தது. அதற்கிணங்க, இம்மாநிலத்திலுள்ள பன்னிரண்டு மாநில பல்கலைக்கழகச் சட்டங்களை திருத்தம் செய்வதற்காக, 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழக (திருத்தச்) சட்ட முன்வடிவானது (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 24/2022 ஏப்ரல் 25, 2022 அன்று மாநிலச் சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்டது. மேற்கூறிய முடிவிற்கிணங்கி, அந்த நோக்கத்திற்காக, அரசானது, 1982ஆம் ஆண்டு தமிழ்ப்பல்கலைக்கழகச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 9/1982 தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**தங்கம் தென்னரசு,**
***தொழில்துறை அமைச்சர்.***

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 19.

**கி. சீனிவாசன்**,
*செயலாளர்.*

2022—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 56/2022**

**1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் X/1937.

18—BB ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 18—BB ஆம் பிரிவில், ''நானூற்று ஐம்பது ரூபாய்கள்'' எனும் சொற்றொடருக்கு பதிலாக, ''ஆயிரம் ரூபாய்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2022.

நீக்கறவு மற்றும் காப்புரை.

3. (1) 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கறவு இருந்த போதிலும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான, முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

தற்போது, 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) 18–BB ஆம் பிரிவின் கீழ் பிற மாநிலங்களிலிருந்தும் மற்றும் இந்தியாவின் சுங்க எல்லையைக் கடந்தும் தமிழ்நாடு மாநிலத்திற்குள் கொண்டு வரப்படும் ஆயத்தீர்வை விதிக்கத்தக்க அனைத்து பொருட்கள் அதாவது, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள், வைன் மற்றும் பீர் ஆகியவற்றின் மீது புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு நானூற்று ஐம்பது ரூபாய்க்கு மிகாத அளவில், அரசால் அவ்வப்போது அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கக்கூடியவாறான வீதத்தில் சிறப்புக்கட்டணம் விதிக்கப்படுகிறது. சிறப்புக் கட்டணத்தின் அதிகபட்ச வீதமானது, அரசினால் 2014–ஆம் ஆண்டில் அறிவிக்கை செய்யப்பட்டது. அதன் பின்பு சிறப்புக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. மாநிலத்தின் வருவாயைப் பெருக்கும் வகையில், ஆயத்தீர்வை விதிக்கத்தக்க அத்தகைய அனைத்து பொருட்களின் மீதும் விதிக்கப்படக்கூடிய சிறப்புக் கட்டணத்தின் அதிகபட்ச வீதமானது புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ரூ.450/– (ரூபாய் நானூற்று ஐம்பது மட்டும்)–லிருந்து புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க, 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2022) 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாள் அன்று மாண்புமிகு ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டு, அது, 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்கூறப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றி அமைக்க விழைகிறது.

V **செந்தில்பாலாஜி,**
*மின்சாரம், மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2022) பிறப்பிக்கப்பட்டதைத் தேவையானதாக்கிய சூழ்நிலைகளை விளக்குகின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 168–ஆம் விதியின்படியான விவர அறிக்கை.**

தற்போது, 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) 18–BB ஆம் பிரிவின் கீழ் பிற மாநிலங்களிலிருந்தும் மற்றும் இந்தியாவின் சுங்க எல்லையைக் கடந்தும் தமிழ்நாடு மாநிலத்திற்குள் கொண்டு வரப்படும் ஆயத்தீர்வை விதிக்கத்தக்க அனைத்து பொருட்கள் அதாவது, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானங்கள், வைன் மற்றும் பீர் ஆகியவற்றின் மீது புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு நானூற்று ஐம்பது ரூபாய்க்கு மிகாத அளவில், அரசால் அவ்வப்போது அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கக்கூடியவாறான வீதத்தில் சிறப்புக்கட்டணம் விதிக்கப்படுகிறது. சிறப்புக் கட்டணத்தின் அதிகபட்ச வீதமானது, அரசினால் 2014–ஆம் ஆண்டில் அறிவிக்கை செய்யப்பட்டது. அதன் பின்பு சிறப்புக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. மாநிலத்தின் வருவாயைப் பெருக்கும் வகையில், ஆயத்தீர்வை விதிக்கத்தக்க அத்தகைய அனைத்து பொருட்களின் மீதும் விதிக்கப்படக்கூடிய சிறப்புக் கட்டணத்தின் அதிகபட்ச வீதமானது புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ரூ.450/– (ரூபாய் நானூற்று ஐம்பது மட்டும்)–லிருந்து புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக, 1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் X/1937) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்தது.

2. அப்போது சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாமல் இருந்த காரணத்தினால், அரசின் மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பிப்பது தேவையானதாயிற்று. அதற்கிணங்க, 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2022), 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்டு, அது 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு* ***தமிழ்நாடு அரசிதழின்*** வெளியிடப்பட்டது.

**V செந்தில்பாலாஜி,**
*மின்சாரம், மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 19.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 57/2022**

**2003ஆம் ஆண்டு சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைத் தயாரிப்புகள் (விளம்பரம் செய்தலைத் தடைசெய்தல் மற்றும் வணிகம் மற்றும் வாணிபம், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தலை முறைப்படுத்துதல்) சட்டத்தை தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்தும் வகையில் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைத் தயாரிப்புகள் (விளம்பரம் செய்தலைத் தடைசெய்தல் மற்றும் வணிகம் மற்றும் வாணிபம், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தலை முறைப்படுத்துதல்) தமிழ்நாடு திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது அரசு, அறிவிக்கையின் வாயிலாக குறிப்பிடப்படலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் 34/2003

3ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2003ஆம் ஆண்டு சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைத் தயாரிப்புகள் (விளம்பரம் செய்தலைத் தடைசெய்தல் மற்றும் வணிகம் மற்றும் வாணிபம், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தலை முறைப்படுத்துதல்) சட்டத்தின் 3ஆம் பிரிவில், (e) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(ee) ''புகைக்குழல் கூடம்'' என்பது, பகிர்ந்துகொள்ளும் புகைக்குழல் அல்லது தனியாக வழங்கப்படக் கூடிய தென்னைப் புகைக்குழலில் இருந்து புகையிலையைப் புகைப்பதற்கு மக்கள் ஒன்று கூடுவதற்கான ஒரு குழு என்று பொருள்படும்;''.

4A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துல்.

3. முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''4A புகைக்குழல் கூடத்தினை தடைசெய்தல்.– இந்தச் சட்டத்தில் அடங்கியிருப்பது எவ்வாறிருப்பினும், நபரெவரும், அவருக்குச் சொந்தமாகவோ அல்லது பிற நபர் எவரின் சார்பாகவோ, உணவுக் கூடம் உள்ளடங்கலான எந்த இடத்திலும், புகைக்குழல் கூடம் எதனையும் திறக்கவோ அல்லது நடத்தவோ அல்லது வாடிக்கையாளர்களுக்கு புகைக்குழலினை வழங்கவோ கூடாது.

விளக்கம்.–''உணவுக்கூடம்'' என்பது உணவு அல்லது சாராயம், மது, கோதுமைச் சாராயம், பார்லி சாராயம் அல்லது பிற தானியவகையிலான மதுபானங்களை உள்ளடக்காதச் சிற்றுண்டி வகை எதனையும், சாதாரண வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு மற்றும் நுகர்வுக்காக விற்கப்படுகின்ற இடம் எதுவும் என்று பொருள்படும்.''.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 12ஆம் பிரிவில் (1)ஆம் உட்பிரிவில்:–

(i) (b) கூறில், ''அல்லது செய்யப்படுகிற'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''அல்லது'' எனும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும்;

(ii) அவ்வாறு திருத்தப்பட்டவாறான (b) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(c) புகைக்குழல் கூடம் எதுவும் நடத்தப்படுகிறவிடத்து.".

13A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்

**5.** முதன்மைச் சட்டத்தின் 13ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"13A. **கைப்பற்றுதலுக்கான அதிகாரம்,—** மாநில அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட, உதவி ஆய்வாளர் படிநிலைக்குக் குறையாத, காவல்துறை அலுவலர் எவரும், 4A ஆம் பிரிவுகளின் வகைமுறைகளானது மீறப்படுகிறது அல்லது மீறப்பட்டுள்ளது என நம்புவதற்கான காரணத்தைக் கொண்டிருந்தால், புகைக்குழல் கூடத்தின் உட்பொருளாகவோ அல்லது துணைப் பொருளாகவோ பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் அல்லது பொருள் எதனையும் அவர் கைப்பற்றலாம்.

21A எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்

**6.** முதன்மைச் சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"21A. **புகைக்குழல் கூடத்தினை நடத்துவதற்கான தண்டனை.—** 4Aஆம் பிரிவின் வகைமுறைகளை மீறுகிறவர் எவரும், ஓர் ஆண்டிற்கு குறையாத ஆனால் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாகும் ஒரு காலஅளவிற்கு சிறைத் தண்டனையும் இருபதாயிரம் ரூபாய்க்குக் குறையாத, ஆனால் ஐம்பதாயிரம் ரூபாய்கள் வரை நீட்டிக்கப்படலாகும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.".

**நோக்கக் காரண விளக்கவுரை**

2003–ஆம் ஆண்டு சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைத் தயாரிப்புகள் (விளம்பரம் செய்தலைத் தடைசெய்தல் மற்றும் வணிகம் மற்றும் வாணிபம், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தலை முறைப்படுத்துதல்) சட்டமானது (மையச் சட்டம் 34/2003) சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலை தயாரிப்புகளின் வணிகம் மற்றும் வாணிபம் மற்றும் உற்பத்தி வழங்குகை மற்றும் விநியோகம் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வகைசெய்கிறது.

2. சென்னை மாநகரில், புகைக்குழல் கூடங்கள் அதிக அளவில் திடீரென பெருகி உடல் நலத்திற்கு கொடிய சீர்கேட்டினை ஏற்படுத்தி வருவதாகவும், பல உணவகங்கள் புகைபிடிக்கும் பகுதிகள்/இடங்களில் சேவையினை வழங்குகின்றதொரு போலித்தலைப்பின் கீழ் புகைக்குழல் நுகர்தலை அனுமதித்து வருவதாகவும், தற்போது, மாநிலத்தில் புகைக்குழல் கூடத்தினை ஒழுங்குபடுத்துகின்ற சட்டம் எதுவும் இல்லையெனவும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

3. எனவே, அரசானது 2003 ஆம் ஆண்டு சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைத் தயாரிப்புகள் (விளம்பரம் செய்தலைத் தடைசெய்தல் மற்றும் வணிகம் மற்றும் வாணிபம், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தலை முறைப்படுத்துதல்) சட்டத்தை (மையச் சட்டம் 34/2003) தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்தும் வகையில், தக்கவாறு திருத்தம் செய்வதன் மூலம், புகைக்குழல் கூடத்தினை தடை செய்வதெனவும், அதனை மீறுதலுக்காக, மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனையும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும், அபராதமும் விதித்து தண்டனை வழங்குவதெனவும் முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 19.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 58/2022**

**2022-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத்தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 6) சட்டம் என வழங்கப்பெறும்.

2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

2. மாநில அரசு, 2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற மூன்றாயிரத்து எழு நூற்று தொண்ணூற்று ஐந்து கோடியே எழுபத்து ஒரு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை–

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

## இணைப்புப் பட்டியல்.

(2–ஆம் பிரிவைக் காண்க).

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 001 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 3,000 | *20,62,000* | 20,65,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 002 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | ... | *2,10,86,000* | 2,10,86,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 003 | நீதி நிருவாகம் | வருவாய் | 2,00,26,000 | *14,30,33,000* | 16,30,59,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 004 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 20,000 | *28,29,000* | 28,49,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 005 | வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை | வருவாய் | 14,02,12,000 | *27,70,000* | 14,29,82,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 252,28,89,000 | ... | 252,28,89,000 |
| 006 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 14,50,30,000 | ... | 14,50,30,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 007 | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 33,28,56,000 | ... | 33,28,56,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 008 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 15,00,00,000 | ... | 15,00,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 009 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 1,76,22,000 | ... | 1,76,22,000 |
| | | மூலதனம் | 315,57,17,000 | ... | 315,57,17,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 010 | வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 37,95,41,000 | ... | 37,95,41,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 011 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 24,21,000 | ... | 24,21,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் (1) | பணிகளும் நோக்கங்களும் (2) | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது (3) (ரூ.) | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* (4) (ரூ.) | மொத்தம் (5) (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 012 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 3,000 | ... | 3,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 013 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 7,000 | ... | 7,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 014 | எரிசக்தித் துறை | **வருவாய்** | 1,000 | ... | 1,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 015 | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | **வருவாய்** | 1,000 | ... | 1,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 40,00,000 | ... | 40,00,000 |
| 016 | நிதித் துறை | **வருவாய்** | 1,22,52,000 | ... | 1,22,52,000 |
| | | **மூலதனம்** | 2,35,01,000 | ... | 2,35,01,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 017 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 5,000 | ... | 5,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 018 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 54,11,000 | ... | 54,11,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 019 | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | **வருவாய்** | 2,94,92,000 | ... | 2,94,92,000 |
| | | **மூலதனம்** | 19,05,89,000 | ... | 19,05,89,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 020 | உயர்கல்வித் துறை | **வருவாய்** | 9,16,07,000 | ... | 9,16,07,000 |
| | | **மூலதனம்** | 3,00,00,000 | ... | 3,00,00,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 021 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | **வருவாய்** | 8,000 | ... | 8,000 |
| | | **மூலதனம்** | 351,26,13,000 | *18,47,46,000* | 369,73,59,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 022 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 19,02,37,000 | *20,00,00,000* | 39,02,37,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 023 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 4,000 | ... | 4,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 024 | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 5,000 | ... | 5,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 026 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | **வருவாய்** | 168,00,05,000 | ... | 168,00,05,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 027 | தொழில் துறை | **வருவாய்** | 6,000 | ... | 6,000 |
| | | **மூலதனம்** | 3,00,01,000 | *1,000* | 3,00,02,000 |
| | | **கடன்** | 1,000 | ... | 1,000 |
| 028 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 6,15,99,000 | ... | 6,15,99,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 029 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | **வருவாய்** | 7,39,09,000 | ... | 7,39,09,000 |
| | | **மூலதனம்** | 49,41,16,000 | ... | 49,41,16,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 030 | எழுதுபொருள் மற்றும் அச்சு – (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 37,86,000 | ... | 37,86,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 031 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | **வருவாய்** | 7,000 | ... | 7,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 032 | தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை | **வருவாய்** | 3,85,98,000 | ... | 3,85,98,000 |
| | | **மூலதனம்** | 6,00,01,000 | ... | 6,00,01,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 033 | சட்டத் துறை | **வருவாய்** | 40,86,000 | ... | 40,86,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 034 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | **வருவாய்** | 599,02,06,000 | ... | 599,02,06,000 |
| | | **மூலதனம்** | 28,66,00,000 | ... | 28,66,00,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 035 | மனிதவள மேலாண்மைத் துறை | **வருவாய்** | 63,68,000 | *38,36,57,000* | 39,00,25,000 |
| | | **மூலதனம்** | 3,50,00,000 | ... | 3,50,00,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 036 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | **வருவாய்** | 17,05,000 | ... | 17,05,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 037 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 2,99,73,000 | ... | 2,99,73,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 038 | பொதுத் துறை | **வருவாய்** | 1,64,29,000 | ... | 1,64,29,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 1,28,74,000 | ... | 1,28,74,000 |
| 039 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | **வருவாய்** | 6,000 | ... | 6,000 |
| | | **மூலதனம்** | 94,79,33,000 | ... | 94,79,33,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 040 | நீர்வளத் துறை | **வருவாய்** | 15,000 | ... | 15,000 |
| | | **மூலதனம்** | 203,92,06,000 | *132,45,78,000* | 336,37,84,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 041 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | **வருவாய்** | 27,000 | *40,70,000* | 40,97,000 |
| | | **மூலதனம்** | ... | *53,33,79,000* | 53,33,79,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 042 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | **வருவாய்** | 7,000 | ... | 7,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 043 | பள்ளிக் கல்வித் துறை | **வருவாய்** | 101,14,84,000 | ... | 101,14,84,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 044 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | **வருவாய்** | 18,75,07,000 | ... | 18,75,07,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 2,000 | ... | 2,000 |
| 045 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | **வருவாய்** | 34,08,09,000 | ... | 34,08,09,000 |
| | | **மூலதனம்** | 3,000 | ... | 3,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 046 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 5,46,04,000 | ... | 5,46,04,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 047 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | **வருவாய்** | 3,00,02,000 | ... | 3,00,02,000 |
| | | **மூலதனம்** | 5,00,00,000 | ... | 5,00,00,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 048 | போக்குவரத்துத் துறை | **வருவாய்** | 3,000 | ... | 3,000 |
| | | **மூலதனம்** | 500,00,00,000 | ... | 500,00,00,000 |
| | | **கடன்** | 23,63,000 | ... | 23,63,000 |

| | | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 049 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | **வருவாய்** | 36,66,84,000 | ... | 36,66,84,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 20,00,000 | ... | 20,00,000 |
| 050 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | **வருவாய்** | 3,000 | ... | 3,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 051 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | **வருவாய்** | 472,64,87,000 | ... | 472,64,87,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 052 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | **வருவாய்** | 14,000 | ... | 14,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 053 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | **வருவாய்** | 1,000 | ... | 1,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 054 | வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | **வருவாய்** | 1,64,40,000 | ... | 1,64,40,000 |
| | | **மூலதனம்** | 12,000 | ... | 12,000 |
| | | **கடன்** | 29,38,75,000 | ... | 29,38,75,000 |
| | கடன் செலவுகள் | **வருவாய்** | ... | *30,41,22,000* | 30,41,22,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| | **மொத்தம்** | **வருவாய்** | **1,615,75,34,000** | ***106,36,29,000*** | **1,722,11,63,000** |
| | | **மூலதனம்** | **1,585,53,01,000** | ***204,27,04,000*** | **1,789,80,05,000** |
| | | **கடன்** | **283,80,05,000** | **...** | **283,80,05,000** |
| | **பெருமொத்தம்** | | **3,485,08,40,000** | ***310,63,33,000*** | **3,795,71,73,000** |

**நோக்க-காரண விளக்கவுரை.**

இச்சட்டமுன்வடிவானது——

(a) 2022– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின்மீது சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை அந்நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)– ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205–ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 அக்டோபர் 19.

**கி. சீனிவாசன்**,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.